**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால்

தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபையின் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- அதிகாரசபை வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் உள்ளககட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமத்தின் காசுபாய்ச்சல்கூற்று எண் 02 இன் படி,காசுபாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாததால் செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்து பெறப்பட்ட தேறிய காசுபாய்ச்சல் மற்றும் நிதியிடல் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளில் முறையே ரூபா 2,497,310 மற்றும் ரூபா 1,667,982 ஆக தொகையானது குறைவாக காசுபாய்ச்சல்கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | தவறுகள் சரி செய்யப்பட்டு திருத்தப்பட்ட காசுபாய்ச்சல்கூற்று சமர்ப்பிக்கப்பட்டது. | இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்க வேண்டும். |
| (ஆ)இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 07 இன் படி, படி,முற்றாக தேய்மானமிடப்பட்ட ஆனால் பயன்படுத்தப்பட்ட ரூபா 11,219,837 பெறுமதியான சொத்துக்கள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தபடவில்லை மற்றும் கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடு எண் 3 இன் படி,சொத்தின் பயன்தரு ஆயட்காலத்தில் ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட தவறு நிதிக்கூற்றில் மதிப்பிடப்பட்டு திருத்தப்படவில்லை. | தற்போது பயன்படுத்தப்படும் சொத்துகளை தவிர பெரும்பாலான சொத்துக்கள் பயன்படுத்தபட்டு விட்டன.மீதமுள்ள சொத்துக்கள் 2022 இல் மீண்டும் கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றில் குறிப்பிடப்படும். | நியமம் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ)இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க 2019 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் வாகனங்கள் ரூபா 62,390,000 ற்கு | 2021 ஆம் ஆண்டில் மறு கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் கணக்கிடப்படுகின்றள. | நியமத்தின் படி கட்டாயம் செயற்பட வேண்டும். |

மீண்டும் கணக்கிடப்பட்டது மற்றும் கணக்குகளில் மீண்டும் கணக்கிடப்பட்ட மதிப்பின் சரி செய்தல் 2021 ஆம் ஆண்டு வரை தாமதமானது.இந்த வாகனங்களிற்கான 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான தேய்மானம் சரி செய்தல் நிதிக்கூற்றில் காட்டப்படவில்லை.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)அதிகாரசபையின் எல்லைக்குட்படாமல் உள்ள கம்பஹா மற்றும் நீர்கொழும்பு வைத்தியசாலையில் நீரேற்று நிலையங்களில் பராமரிப்புக்காக மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதி செலுத்த வேண்டிய மீதியான ரூபா 7,782,979 மீதியில் ரூபா 5,940,770 ஆனது 05 ஆண்டுகளுக்கு மேலாக செலுத்தப்படாமல் இருந்தது. | நீர்கொழும்பு வைத்தியசாலை தொடர்பான நிலுவை தொகையை பெற்று கொள்ளுமாறு வரி அமைச்சின் செயலாளர் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.அதன்படி,பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. கம்பஹா வைத்தியசாலையில் இருந்து உரிய நிதியை பெற்று கொண்டதன் பின்னர் 30.09.2022 முதல் பாராமரிப்பு நடவடிக்கையில் இருந்து வெளியேற திட்டமிடப்பட்டுள்ளது. | உடனடியாக மீட்க ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (ஆ) 31 டிசம்பர் 2021 இல் மொத்த பெறவேண்டிய மீதி ரூபா 4,335,030 இல் மடிவேலா பாராளுமன்றத்தின் பொது தலைமை செயலகத்திற்கான வீடமைப்பு கட்டிடத்திற்காக ரூபா 1,244,093 பெற வேண்டியுள்ளது,159 காண்டமேனியம் சொத்துகளிற்காக பெற வேண்டிய ரூபா 2,671,161 வீடமைப்பு கட்டிடம் மற்றும் 53 ஜலதார அரச ஊழியர்களின் வீடமைப்பு கட்டிடத்தில் பெற வேண்டிய ரூபா 419,775 மற்றும் அந்த பெற வேண்டிய மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 3,090,936 | மீதமுள்ள பெறவேண்டிய தொகையை மீளபெற முடியாது என்பதால் அவற்றை புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு மீதி கடனுக்காக உள்ளக குழு ஒன்று நியமிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | நிலுவையாக உள்ள தொகையை மீள பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

முன் கொண்டு செல்லப்படுகிறது.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 02ஜீன் 2003 திகதியிட்ட பொது முயற்சியாண்மை சுற்றறிக்கை இல பிஇடி/12 இன் பந்தி 8.2.2 (திருத்தப்பட்ட 17-11-2021 முதல் பொது முயற்சியாண்மை வழிகாட்டலின் 6.2) மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 11 | பொது கூட்டுதாபனத்தின் மேலதிக நிதிகள் நிதி அமைச்சரின் அனுமதியுடன் முதலீடு செய்யயப்பட வேண்டிய போதிலும்,மீளாய்வாண்டில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 463,238,430 பெறுமதியான 5 நிலையான வைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. | நிதி அமைச்சரிடம் அறிவிக்கப்பட்டு எதிர்காலத்தில் அனுமதி பெறப்படும். | சுற்றறிக்கையுடன் செயற்பாடுகள் இணங்க வேண்டும். |
| (ஆ)11/16/2021 திகதியிட்ட அரச முயற்சியாண்மை சுற்றறிக்கை 1/2021 முலம் வெளியிடப்பட்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான செயற்பாட்டு கையேட்டின் 3 வது அத்தியாயத்தின் 3.2 | பொது முயற்சியாண்மை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் தந்திரோபாய திட்டம் மற்றும் செயல்திட்டத்தின் படி,ஊழியர்களின் செயல்திறனை அளவிடுவதற்கு தயாரிக்கப்பட்ட முறைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.ஆனால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான எந்த மதிப்பீட்டு முறையும் இல்லாமல் அதிகார சபை ரூபா 8,062,180 ஊக்கதொகையாக செலுத்தப்பட்டது. | ஊழியர்களின் செயல்திறனை அளவிடுவதற்கான ஒரு முறைமை நிதித் துறையால் திட்டமிடப்பட்டு பொது முயற்சியாண்மைக்கு அனுப்பப்படும். | சுற்றறிக்கையுடன் செயற்பாடுகள் இணங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 206,261,702 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 44,534,661 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 161,727,042 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானம் ரூபா 167,774,162 அதிகரித்தமை முன்னேற்றத்துக்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 05 ஜீலை 2017 திகதியிட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் படி,குடியிருப்பு சொத்துகளை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்பட்ட ஆரம்ப கடிதத்தின் செல்லுபடியாகும் காலம் 03 ஆண்டுகள் காணப்பட்ட போதிலும் காண்டோமினியம் முகாமைத்துவ சான்றிதழ் பெறாத சொத்து உரிமையாளரிற்கான 2011 மற்றும் 2018 ற்கு இடையில் வழங்கப்பட்ட 682 ஆரம்ப அனுமதி கடிதங்களின் செல்லுபடியாகும் காலத்திற்கான பிந்திய பணம் அதிகார சபையால் அறவிடுவதற்கு ஆயத்தம் செய்யப்படவில்லை. | ஆரம்ப அனுமதி கடிதங்கள் வழங்கப்பட்டு 03 வருடங்களுக்கு மேலாக வழங்கப்பட்ட திட்டங்களுக்கு இறுதி சான்றிதழை வழங்குவதற்கு முன்னர் ஆரம்ப அனுமதிக்கப்பட்டு இறுதி சான்றிதழ் 2022 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும். | செல்லுபடியாகும் காலத்திற்குள் சான்றிதழை வழங்குவதற்கான முறையான முறைமை உருவாக்கப்பட வேண்டும். |
| (ஆ)சட்டத்தின் பிரிவு 09(அ) (1) இன் படி,குடியிருப்பு சொத்துகளில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானம் தொடர்பாக பெறப்பட்ட புகார்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.ஆனால் 2013 முதல் 2021 வரை பெறப்பட்ட 16 புகாார்கள் குறித்து அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.மேலும் ஒரு காண்டமேனியம் சொத்தின் ஒரு பகுதியை வாங்குபவர்,வசதிகள் தொடர்பாக எழுதப்பட்ட புகார் தொடர்பாக சட்டத்தின் பிரிவு 9 (ஆ) இன் படி கையாளப்பட வேண்டும்.ஆனால் பெறப்பட்ட 75 புகார்கள் இவ்வாறு கையாளப்படவில்லை. | கருத்துகள் தெரிவிக்கப்படவில்லை. | காண்டோமினியம் சொத்துகள் தொடர்பான புகார்கள் சட்டத்தின் படி கையாளப்பட வேண்டும். |
| (இ)காண்டமோனியம் சொத்து சட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டின் 45 ஆம் எண் காண்டோமினியம் (திருத்தம) சட்டத்தின் முதன்மை சட்டத்தின் அட்டவணையின் 3(2) இன் கீழ்,முகாமைத்துவ நிறுவனங்களின் வருடாந்த பொது கூட்டங்கள் | உலகளாவிய தொற்று நோய் நிலைமை காரணமாக அனைத்து கூட்டங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன மற்றும் இயக்க கட்டுபாடுகள் காரணமாக கூட்டங்களை நடத்த முடியவில்லை. | முகாமைத்துவ கூட்டுதாபனங்களின் மீது அதிகாரசபை முறையான கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடத்தப்படும் மற்றும் பிரிவு 8(4)(அ) இன் படி,கூட்டுதாபனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் பிரதி அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.ஆனால் 101 முகாமைத்துவ கூட்டுதாபனத்தின் ஆண்டு பொது கூட்டம் 15 முதல் 37 மாதங்கள் ஆகியும் கூட்டம் நடத்தப்படவில்லை.மேலும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதிக்கூற்றுகளை சமர்பிப்பது தொடர்பான விசாரணை மற்றும் கண்காணிப்பை அதிகாரசபை நடத்தவில்லை. | | |
| (ஈ)1977 ஆம் ஆண்டு முதல் அதிகாரசபையின் அலுவலகம் இயங்கி வரும் வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான கட்டிட வளாகத்திற்கு இரு நிறுவனங்களுக்கு இடையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை.மேலும் 2018/2019 மற்றும் 2019/2020 ஆம் ஆண்டுகளில் வாடகையாக ரூபா 4,848,660 செலுத்தப்பட்டது.27 நொவம்பர் 2020 திகதியிட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி ஆணையத்தின் கடித எண் 8/1/1/21/1 இன் படி,2021 ஆம் ஆண்டிலிருந்து வாடகை ரூபா 8,400,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளதன் படி 2021 ஆம் ஆண்டிற்கான வாடகை செலவாக கணக்கிடப்பட்டது.ஆனால் முறையான ஒப்பந்தம் (கட்டிட பராமரிப்பு உட்பட) 21 ஜீன் 2022 வரை எட்டப்படவில்லை.ஆனால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் எதுவித உடன்படிக்கையும் இன்றி கட்டிடத்திற்கு மார்பிள் போடுவதற்கு ரூபா 748,871 மற்றும் பிற பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 3,384,835 செலவிடப்பட்டது. | இறுதி உடன்பாடு எட்டப்படாததால் ஒப்பந்தங்கள் கையெழுத்திடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | இரு தரப்பினரும் விரைவில் ஒரு உடன்பாட்டை அடைய வேண்டும். |
| (உ)02 வருடங்களுக்கு மேலாக 02 ஒழுக்காற்று விசாரணைகள் நிறைவடையாத நிலையில் | ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. | ஒழுக்காற்று விசாரணைகள் விரைவில் |

| | | |
|---|---|---|
| அதற்காக மொத்தம் ரூபா 72,727 செலவிடப்பட்டிருந்தது.இந்த ஒழுக்காற்று விசாரணையின் போது 09 செப்ரெம்பர் 2019 திகதியிட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை 27/2109 இன் படி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் கையாளப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | | முடிக்கப்பட வேண்டும். |

3.2 செயலற்ற அல்லது பயன்படுத்தப்படாத ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 01 ஒக்டோபர் 2019 அன்று விபத்தடைந்த வாகனத்திற்கு ரூபா 251,350 ற்கு பழுது பார்க்கும் வேலை 23 டிசம்பா 2019 இல் முடிவடைந்தது.மேலும் எவ்.ஆர் 104(4) இன் அறிக்கையின் படி அந்த தொகை குற்றவாளியிடமிருந்து பெறப்பட வேண்டும்.ஆனால் அந்த தொகை பெறப்படவில்லை மற்றும் கராஜில் இருந்து வாகனம் 23 பெப்ரவரி 2022 வரை விடுவிக்கப்படவில்லை. | கராஜில் இருந்து விடுவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | பழுது பார்க்கப்பட்டு வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) 08 பெப்ரவரி 2020 இல் பழுதடைந்த வாகனத்தின் இறுதி ஆய்வு அறிக்கையின் படி,காப்புறுதியில் இல்லாத பழுதுபார்த்தல் செலவை ஓட்டுநரிடம் இருந்து வசூலிக்க முடிவு செய்யப்பட்டது.ஆனால் நிறுவன வளாகத்தில் உதிரிபாகங்கள் இல்லை என்று கூறி 02 ஆண்டுகளுக்கு மேலாக பழுதுபார்க்காமல் வைக்கப்பட்டுள்ளது. | ஊதிரி பாகங்கள் இல்லாமையால் திருத்தப்படவில்லை. | ஊடனடியாக பழுது பார்க்கப்பட வேண்டும். |
| (இ) 19 டிசம்பர் 2019 இல் விபத்து ஏற்பட்ட வாகனத்தின் பழுது பார்த்தல் செலவு ரூபா 2,764,012 என்றும் எவ்.ஆர் 104(4) இன் படி,ஓட்டுநர் | காப்புறுதி தொகையில் 5 இலட்சம் மட்டுமே பெறமுடியும் என்றும் மீதி தொகையை மூன்றாம் தரப்பினரிடம் இருந்து பெற வழக்கு தொடரப்பட்டுள்ளது.பழுதுபார்ப்பதற்கான விலைகள் கோரப்படுகின்றன. | வுாகன பழுதுபார்த்தல் விரைவில் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குற்றவாளி இல்லை என்றும் மூன்றாம் தரப்பினரிடம் இருந்து மீட்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.இது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு முடிவடையாத நிலையில் 02 வருடங்களுக்கு மேலாக வாகனம் பழுதுபார்க்கப்படாமல் அதிகாரசபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | | |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான ஊழியர்கள் முறையே 139 மற்றும் 115 ஆகவும் 24 வெற்றிடங்களில் 14 ஊழிய தர பதவிகள் வெற்றிடமாக இருந்தது.மேற்படி 07 ஊழிய தர பதவிகள் 2010 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருந்த போதிலும் 07 ஜீலை 2022 வரை அந்த பதவிகளை நிரப்ப அதிகார சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றது. | அத்தியாவசிய பதவிகளை நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது வசதிகள் சபை (திருத்தம்) சட்ட எண் 24,2003 இன் 5 (இ) இன்படி,காண்டோமினியம் சொத்துகளுக்காக நிறுவப்பட்ட நிர்வாக கூட்டுதாபனத்தின் முயற்சியாண்மை மற்றும் கட்டுபாடு அதிகார சபையால் செய்யப்பட வேண்டும்.ஆனால் 31 டிசம்பர் 2020 இல்,1079 முகாமைத்துவ கூட்டுதாபன அதிகாரத்தின் கீழ் நிறுவப்பட்டு 31 டிசம்பர் 2021 அன்று 951 ஆக குறைக்கப்பட்டது.அந்த 951 பேரில் 557 செயலிழந்து விட்டதாகவும்,அதற்கேற்ப அதிகார சபை ஒழுங்கு முறைகளை முறையாக | கருத்துகள் தெரிவிக்கப்படவில்லை. | இது சட்டத்தின் படி செய்யப்பட வேண்டும். |

மேற்கொள்ளவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

**4 பொறுப்பு கூறல் மற்றும் நல்லாட்சி**

**4.1 வருடாந்த செயல் திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல்திட்டத்தில் நிதி இலக்குகள் குறிப்பிடப்படவில்லை மற்றும் பௌதீக இலக்குகள் சதவீதமாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.மற்றும் அந்த இலக்குகளை அடைந்தமை தொடர்பான செயல்திறன் அறிக்கை எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துகள் தெரிவிக்கப்படவில்லை. | நிதி மற்றும் பௌதீக இலக்குகள் உள்ளிட்ட செயல்திட்டம் ஒரு நிலையான வடிவத்தின் படி தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் செயல்திறன் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**.2 பாதீட்டு கட்டுப்பாடு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 வது வருமான உருப்படியின் கீழ் மீளாய்வாண்டில் மொத்த பாதிட்ட வருமானம் ரூபா 1,470,000 அடையப்படவில்லை.மற்றும் 05 பாடங்களுக்கான செலவினப் பாதீடு 37 சதவீதத்தில் இருந்து 116 சதவீதமாக அதாவது ரூபா 27,492,789 ஆக அதிகரித்துள்ளது.மேலும் மீளாய்வாண்டின் வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கப்படாத 02 செலவின பாடங்களுக்காக ரூபா 25,900,000 செலவிடப்பட்டுள்ளதுடன்,04 செலவின பாடங்களுக்காக வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 108,500,000 செலவிடப்படாமல் உள்ளது.ஆகையால் வரவு செலவு திட்ட ஆவணம் பயனுள்ள கட்டுபாட்டு கருவியாக பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப வேறுபாடுகள் காணப்படுகின்றன. | வரவு செலவு திட்ட ஆவணம் ஒரு பயனுள்ள கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும். |